யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

**Field Work Centre**

FWC

# தவணைப் பரீட்சை, யூன் - 2016
# Term Examination, June - 2016

| தரம் :- 13 (2016) | தொடர்பாடலும் ஊடகக்கற்கையும் – II | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

- ❖ ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.
- ❖ ஒவ்வொரு வினாவுக்கும் 20 புள்ளிகள் வழங்கப்படும்

**01) "தொடர்பாடல் செயன்முறைக்கு ஐம்புலன்கள் மிக அடிப்படையாகின்றன"**

1) பர்லோ தொடர்பாடல் மாதிரியில் அனுப்புநர், பெறுநர் தொடர்பாடல் பண்புக் கூறில் காணப்பட வேண்டிய ஐந்து அம்சங்களைப் பெயரிடுக.
2) நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டமைந்த மூன்று வகையான கூட்டுத் தொடர்பின் வகைப்பாட்டை பெயரிட்டு, எடுத்துக் காட்டுக்களையும் தனித்தனியே குறிப்பிடுக.
3) நிறுவனத்தில் அங்கீகரிக்கப்பட்ட நெறிப்படுத்தலுடன் இடம்பெறுகின்ற, அங்கீகரிக்கப்படாத முறையில் இடம்பெறுகின்ற தொடர்பாடல் விதங்கள் இரண்டையும் பெயரிட்டு அவற்றின் இயல்புகளை இரு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு சுருக்கமாக விளக்குக.
4) தொடர்பாடலில் இடையூறுபண்புக்கூறை எடுத்துக் காட்டும் மாதிரியைப் பெயரிட்டு, தொடர்பாடல் செயலொழுங்கில் இடையூறு பண்புக்கூறு உருவாகும் நான்கு வழிமுறைகளை உதாரணங்களுடன் விபரிக்க.

**02)** 1) "நல்லதொரு தொடர்பியலாளர் நல்லதொரு செவிமடுப்பவராவார்" செவிமடுத்தலின் நான்கு முக்கிய கட்டங்களைத் தருக.
2) "சுய எண்ணக்கரு (*Self concept*) தொடர்பாடலுடன் இயற்கையாகவே இரண்டறக் கலந்திருக்கிறது" சுய எண்ணக்கரு என்னவென்பதை சுருக்கமாக விபரிக்க.
3) "உள்ளக தொடர்பாடற் தேர்ச்சியில் மனதைக் கட்டுப்பாட்டில் வைத்திருத்தல் மிக முக்கியமானதாகும்" மனதைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் வழிமுறைகள் மூன்றினைக் குறிப்பிட்டு, மனதைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்காமையால் ஏற்படும் பாதிப்புக்களைச் சுருக்கமாக விபரிக்குக.
4) ஆளிடைத் தொடர்பாடற் தேர்ச்சிகள் நான்கினைக் குறிப்பிட்டு அவற்றுள் இரண்டினை விபரிக்க.

**03) ஆக்க ரீதியான தொடர்பாடல் பிரவேசங்களை தொடர்பாடல் நிலைகளிலும், வெகுசன ஊடக அறிக்கையிடல்களிலும் அவதானிக்க முடிகிறது.**

1) ஆக்க ரீதியான தொடர்பாடல் வடிவங்கள் நான்கினை எடுத்துக்காட்டி, அவற்றில் அவதானிக்கக்கூடிய இரு இயல்புகளைத் தருக.
2) மரபுசார்ந்த அடிப்படையிலும், கிராமிய மக்கள் மத்தியிலும் பின்பற்றப்பட்டு வருகின்ற ஆக்கத் தொடர்பாடல் வடிவங்கள் நான்கினைக் குறிப்பிட்டு அவை மக்கள் மத்தியில் வலுவுள்ள தொடர்பாடல் ஊடகமாக இருப்பதற்கான காரணிகளின் இரண்டு அம்சங்களைக் கொண்டு விபரிக்குக.
3) பத்திரிகை ஒன்றில் நீர் அவதானிக்கக்கூடிய ஆக்க ரீதியிலான அறிக்கையிடல்கள் நான்கினை எடுத்துக்காட்டி அவற்றில் இரண்டைப் பற்றி சுருக்கமாக விபரிக்குக.
4) தொடரறா ஊடகவியலில் (*Online media*) இணையம் பெரும் புரட்சியை ஏற்படுத்தியுள்ளது. நவீன ஊடகம் (*New Media*) என்ற அடிப்படையில் தொடரறா ஊடகத்தின் தனித்துவமான அம்சங்கள் நான்கினை குறிப்பிட்டு விபரிக்குக.

**04) “பாடசாலை ஊடகம் கழகத்தின் வினைத்திறன்மிக்க செயற்பாட்டுக்கு உள்ளக மற்றும் வெளியகக் குழுக்களை அமைத்தல் அவசியமானது”**

1) பாடசாலை ஊடகக் கழகத்தின் வெளியகக் குழுவிற்கு நியமிக்கப்படக் கூடிய நான்கு நபர்களைப் பெயரிடுக.
2) உங்கள் பாடசாலைக்குப் பயன்படும் ஓர் அபிவிருத்திச் செயற்றிட்டத்தைப் பெயரிட்டு, அவ்வாறான அபிவிருத்திச் செய்றிட்டத்தை மதிப்பீடு செய்வதற்கான மூன்று அம்சங்களைக் குறிப்பிட்டு, அவற்றுள் ஒன்றைச் சுருக்கமாக விளக்குக.
3) வெகுசன ஊடக நேர்காணல்களின் முக்கியத்துவத்தை இரண்டு அம்சங்களின் அடிப்படையில் குறிப்பிட்டு, அவை ஒவ்வொன்றுக்கும் இரண்டு உதாரணங்களை தந்து விபரிக்குக.

**05) “விழிப்புணர்வு மிக்க பெறுநர் மற்றும் ஊடக எழுத்தறிவு பற்றிய செயலமர்வின் பின்னர் நல்ல பாடல்களை இரசிப்பதற்கும் நல்ல படங்களைப் பார்ப்பதற்கும், ரெலி நாடகங்களை பார்ப்பதில்லை என்ற தீர்மானத்திற்கும் மாலா வந்தாள்”**

1) ஊடக எழுத்தறிவு என்ற எண்ணக்கருவை சுருக்கமாக விளக்கி, விழிப்புணர்வுமிக்க பெறுநர் ஆகிய மாலாவிடம் இனங்காணக்கூடிய இரு இயல்புகளை சுட்டிக் காட்டுக.
2) குமார் கிராமத்தின் பிரச்சினை ஒன்றை இனங்கண்டு, அவற்றை மக்களிற்கும் ஆட்சியாளருக்கும் தெரியப்படுத்தவும், கவனத்தில் கொண்டு வரச் செய்யவும் செய்திக் கதை ஒன்றினை எழுதினான். இவ்வாறான ஊடக அறிக்கையிடல் போக்கு எவ்வாறு அழைக்கப்படும். அதில் நீர் அவதானிக்கக்கூடிய இரு இயல்புகளை குறிப்பிடுக.
3) தொலைக்காட்சி இல்ல கலாசாரம் என்ற எண்ணக்கருவை விளக்கி, அவற்றின் ஊடாக வன்முறைகள் வெளிக்கொணரும் விதத்தை நான்கு எடுத்துக்காட்டுக்களை அடிப்படையாகக் கொண்டு விபரிக்குக.
4) பொறுப்பு வாய்ந்த பிரசை என்ற அடிப்படையில் கூட்டாக வாழும் சமூகத்தை உருவாக்கும் நோக்கில் தொடர்பாடல் செயன்முறைகளையும் வெகுசன ஊடக அறிக்கையிடல்களையும் மேற்கொள்ளும் நான்கு வழிமுறைகளை குறிப்பிட்டு விபரிக்குக.

**06) மனிதன் வாழும் சூழலுக்கேற்ப ஏற்றுக் கொள்ளப்பட்ட நடத்தைக் கோலங்களை கற்றுக்கொள்ளுதல் சமூக கலாசார பின்னணியூடாகவே இடம்பெறுகின்றது.**

1) “ரோன்சி மலினோவுஸ்கி” கலாசாரம் தொடர்பாக முன்வைத்துள்ள வரைவிலக்கணத்தில் உள்ளடங்கியுள்ள நான்கு கூறுகளைப் பெயரிடுக.
2) “ஊடக கலாசாரம்” (*Media Culture*) என்ற எண்ணக்கருவை சுருக்கமாக அறிமுகம் செய்க.
3) ஊடக கலாசார செயன்முறையினால் சமூகத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை நான்கு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு சுருக்கமாக விளக்குக.
4) “ஊடக அறிவித்தல் ஒரு சமூகத் தேவையாக இன்று காணப்படுகின்றது” ஊடக அறிவித்தலுக்கும் சமூகத்துக்குமுள்ள தொடர்பினை நான்கு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு கட்டுரை வரைக.

**07) “மொழியின் தோற்றம் மனித சமூகத்தின் அத்தியாவசிய அம்சமாக இருந்தது”**

1) மொழியின் வடிவத்துக்கேற்ப எழுத்துக்களை இருவகையாக வகைப்படுதலாம். அவ் இரு வகை எழுத்து வடிவங்களும் எவை? உதாரணம் தருக.
2) தொடர்பாடல் கருமங்கள் மற்றும் வெகுசன ஊடக செயற்பாடுகளின் போதும் மொழி பயன்படுத்தப்படும் நான்கு வடிவங்களை (பேதங்களை) குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக.
3) “நவீன ஊடகங்களின் மொழிப் பயன்பாடு இலத்திரனியல் மொழியாக மாற்றமடைந்துள்ளது” நவீன ஊடகங்களின் மொழிப் பண்பாட்டில் எதிர்நோக்கக்கூடிய இரண்டு மட்டுப்பாடுகளை சுட்டிக்காட்டி, அவற்றின் ஒன்றை விபரிக்குக.
4) வானொலி ஊடகத்தில் மொழியின் பயன்பாடு தொடர்பாக கவனம் செலுத்த வேண்டிய மூன்று அடிப்படை அம்சங்களை விளக்குக.